# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 77 | 4 Pages | 19.10.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 77 | 4 பக்கங்கள் | 19.10.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இஸ்ரேல்ஹமாஸ் இடையே போர்நிறுத்தம்ரஷியாவின் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிராகரிப்பு



நியூயார்க், அக். 19

இஸ்ரேல்ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம்ஏற்படவேண்டும்என்பதைவலியுறுத்தி ரஷியா ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டு வந்தது.

5 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்பட மொத்தம் 15 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் ஒரு தீர்மானம் நிறைவேற 9 நாடுகளின் ஆதரவு தேவை.

ரஷியாவின் தீர்மானத்துக்கு ஆதரவாக சீனா, கபோன், மொசாம்பிக், ரஷியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 5 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. இந்த தீர்மானத்துக்கு எதிராக இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய 4 நாடுகள் எதிராகவாக்களித்தன. அல்பேனியா, பிரேசில், ஈக்வடார், கானா, மால்டா, சுவிட்சர்லாந்து ஆகிய 6 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. இதனால், இந்தத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

## இங்கிலாந்தில் இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த இந்தியருக்கு சிறை

லண்டன், அக். 19

இங்கிலாந்து நாட்டின் வெஸ்ட் மிட்லாண்ட்ஸ் பகுதியை சேர்ந்தவர் முகன் சிங் (வயது 39). இந்திய வம்சாவளியான இவர் கடந்த 2021ம் ஆண்டு பர்மிங்காமில் இருந்து மேரிலெபோனுக்கு சென்ற ரெயிலில் ஏறி பயணம்செய்தார். அப்போதுபர்மிங்காம்மூர்ஸ்ட்ரீட்ரெயில்நிலையத்தில் இருந்து ஏறிய சுமார் 20 வயது இளம்பெண் ஒருவர் அவரது அருகில் அமர்ந்திருந்தார். அப்போது அந்த பெண்ணுக்கு முகன் சிங் பாலியல் தொல்லை அளித்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து இளம்பெண் அளித்த புகாரின்பேரில் முகன் சிங்கை போலீசார் கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை அங்குள்ளவார்விக்கிரவுன்கோர்ட்டில்நடைபெற்று வந்தது. இதில் முகன் சிங் மீதான குற்றச்சாட்டு உறுதியானதால் அவருக்கு 16 வாரம் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பளித்தது. மேலும் பாலியல் குற்றவாளிகள்பதிவேட்டில்அடுத்த 7 ஆண்டுகளுக்குஅவரதுபெயரையும் சேர்த்து கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## பாகிஸ்தானில் 2 பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்ற ராணுவம்




இஸ்லாமாபாத், அக். 19

பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணத்தில் பயங்கரவாதிகள் முகாமிட்டு இருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் ஆப்கானிஸ்தான் எல்லை அருகே உள்ள பகுதிகளில் ராணுவத்தினர் தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது மறைந்திருந்த பயங்கரவாதிகள் ராணுவ வீரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே சரமாரி தாக்குதல் நடைபெற்றது.

இந்த தாக்குதலில் 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மற்ற பயங்கரவாதிகள் தப்பி ஓடினர். பின்னர் அவர்களது முகாம் கைப்பற்றப்பட்டு அங்கிருந்து பயங்கர ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதற்கிடையே பயங்கரவாதிகள் தாக்குதலில் இரு ராணுவ வீரர்களும் பலியாகினர்.

## வடகொரியாவுக்கு பயணம் மேற்கொண்ட ரஷிய வெளியுறவுத்துறை மந்திரி



ரஷியா, அக். 19

உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், போரை தொடர்ந்து நடத்த ரஷியாவுக்கு ஆயுதம், வெடிப்பொருட்கள் தேவைப்படுகிறது. இதனால் வடகொரியாவுடன் நட்பை வளர்த்து வருகிறது.

கடந்த ஜூலை மாதம் ரஷியாவின் ராணுவ மந்திரி செர்கெய் ஷோய்கு வடகொரியா சென்றிருந்தார். கடந்த மாதம் வடகொரியா அதிபர் கிம் ஜான் உன் ரஷியா சென்றிருந்தார். அப்போது புதினை சந்தித்து பேசினார்.

மேலும், ஆயுத தொழிற்சாலைகள், போர் விமானங்களை ஆய்வு செய்தார் கிம் ஜாங் உன். இதனால் ரஷியா ராணுவ தொழில்நுட்பத்தை வடகொரியாவுக்குவழங்கஇருப்பதாகஅமெரிக்காஉள்ளிட்டமேற்கத்திய நாடுகள் கவலை தெரிவித்தன.

இருநாடுகளுக்கும் இடையில் ஆயுத ஒப்பந்தம் ஏற்பட்டால், உக்ரைன் போரில் அது தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இன்று ரஷியாவின் வெளியுறவுத்துறை மந்திரி செர்கெய் லாவ்ரோவ், வடகொரியா சென்றுள்ளார். இருநாடுகளுக்கு இடையிலான ராஜாங்க ரீதியிலான நட்பில் இது முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, வடகொரியா ஆயிரத்திற்கும் மேற்பட்ட கன்டெய்னரில் ராணுவ பொருட்களை ரஷியாவுக்கு வடகொரியா வழங்கியுள்ளது என்று வெள்ளை மாளிகை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தகுந்தது.

வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன், ரஷியா அதிபர் புதினை தங்கள் நாட்டிற்கு அழைத்துள்ளார். இதை புதினும் ஏற்றுள்ளார். ஆனால், தேதி இன்னும் முடிவாகவில்லை. இந்த வாரத்தின் தொடக்கத்தில்தான் புதின் சீனா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுக்குமாடி குடியிருப்புகளின் பொது பயன்பாட்டுக்கான மின் கட்டணம் குறைப்பு: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு




சென்னை, அக். 19

4 மாவட்ட கலெக்டர்கள் கள ஆய்வு கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சாலைப் பணிகள், பாலங்கள், சமூக நலத் திட்டங்கள் ஆகிய வற்றை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றி தருவதுதான் நமது இலக்காக இருக்க வேண்டும். பெரும்பாலான பணிகள் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேறி னாலும் ஒரு சில பணிகளில் தொய்வு இருப்பதை கவனித் தோம். அதற்கான விளக்கத்தை தெரிவித்தீர்கள்.

அதன்படி பணிகளை விரைந்து முடிக்க கேட்டுக்கொள்கிறேன். திட்டங்கள் காலதாமதம் ஏற்படுவ தால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி முந்தைய ஆய்வு கூட்டங்களில் சொன்னதை மீண் டும் இங்கே சுட்டிக்காட்ட விரும் புகிறேன். அரசின் உட்கட்ட மைப்பு பணிகள் பெரும் நிதி ஒதுக்கீட்டில் நடக்கிறது. அந்த பணி முடிவடையாத போது திட் டத்துக்கான செலவு அதிகரிப்ப தோடு, நிறைவேறாத பணிகளால் அந்த பகுதி மக்கள் பாதிப்புக்கும் உள்ளாகிறார்கள்.

எனவே எக்காரணம் கொண்டும் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

கட்டுமான பணிகள் குறிப்பிட்ட காலத்தில் முடிவடைய வேண்டும் என்பது போல் நலத்திட்டங்களும் குறிப்பாக விளிம்பு நிலை, பட்டிய லின மற்றும் பழங்குடியின மக்கள் நலன் கருதி செயல்படுத்தப்படும் திட்டங்கள் எந்தவித குறைபாடும் இன்றி முழுமையாக குறிப்பிட்ட காலத்தில் சென்றடைய வேண் டும் என்பதை கலெக்டர்கள் கண் காணிக்க வேண்டும்.

இந்த அரசு ஏழை எளிய மக்க ளின் வாழ்க்கை தரத்தை உயர்த்து வதில் மிகுந்த கவனம் செலுத்துகி றது.

எனவே அனைத்து துறை தலை வர்களும் தங்கள் துறை மூலம் செயல்படுத்தப்படும் வாழ்வாதார தலைவர்களும் அனைத்து துறை திட்டங்களிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண் டும்.

நான் 2 முக்கிய அறிவிப்புகளை இந்த கூட்டத்தின் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்.

1. தென்சென்னை பகுதி மக்க ளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இந்த அரசு பதவி ஏற்றவுடன் ராஜீவ்காந்தி தகவல் தொழில் நுட்ப சாலையில் உள்ள பெருங் குடி கட்டண சாவடியில் கட்ட ணம் வசூல் செய்வது கைவிடப் பட்டது.

2. சென்னை மாநகரம் மற்றும் பிற மாநகராட்சியையொட்டி உள்ள புறநகர் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் சிறு அடுக்கு மாடி குடியிருப்புகள் (சிறிய அடுக் குமாடி வீடுகள்) உள்ளன.

அண்மையில், தமிழ்நாடு மின் சார ஒழுங்கு முறை ஆணையம், மின் கட்டண முறையை மாற்றிய மைத்த போது இந்த குடியிருப்புகளின் பொது விளக்கு வசதிகள், நீர் இறைக்கும் மோட் டார்கள் போன்ற பொது பயன் பாட்டு பணிகளுக்கான மின் கட்ட ணங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டண முறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதனால் பொது மக்களுக்கான மின்சாரத்துக்கு ஒரு யூனிட்டுக்கு 8 ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டி உள்ளது.

இக்குடியிருப்புகளில் வசிக்க கூடிய நடுத்தர மக்களை இது பெரி தும் பாதிப்பதாக உள்ளது என பல் வேறு குடியிருப்பு நல சங்கங்கள் தெரிவித்ததன் அடிப்படையில் இதனை பரிசீலித்து 10 வீடுகள் அல்லது அதற்கு குறைவாக 3 மாடிகள் அல்லது அதற்கு குறை வாகவும் இருக்க கூடிய மின் தூக்கி (லிப்ட்) இல்லாத அடுக்குமாடி குடியிருப்பு களுக்கு பொது பயன் பாட்டுக்கான புதிய சலுகை கட் டண முறை நடைமுறைப்படுத் தப்படும்.

இதன் கீழ் பொது பயன்பாட் டுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் 1 யூனிட்டுக்கு 8 ரூபா யில் இருந்து 5 ரூபாய் 50 பைசா வாக குறையும்.

இதனால் மாநிலம் முழுவதும் உள்ள சிறு குடியிருப்புகளில் வசிக் கும் நடுத்தர மக்கள் பயன் அடை வார்கள்.

## காங்கயத்தில் குழந்தை திருமணம் ஒழிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

காங்கயம், அக். 19

குழந்தை திருமண ஒழிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி காங் கயத்தில் நடைபெற்றது. காங்கயம் கார்மல் மகளிர் மேல்நிலைப் பள்ளி யில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் சாந்தி அமலோர் தலைமை வகித் தார்.

இதில் பெண் குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியாகும் முன்பே திரும ணம் செய்யக்கூடாது. குழந்தை திரு மணங்களை தடுத்து நிறுத்துவதோடு, அவர்களின் பள் ளிக் கல்வி தொடர்வதற்கும் வழி வகை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டன.

இதைத்தொ டர்ந்து, மாணவிகள், ஆசிரியர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். கார்மல் மகளிர் மேல் நிலைப் பள்ளியைச்சேர்ந்த மாணவி கள், ஆசிரியர்கள், காங்கயம் வட்ட சட்டப் பணிகள் குழு உறுப்பினர் பிரசாந்த், தன்னார்வலர் அமைப்பின் நிர்வாகி வசந்தி உள் ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில் ரெயிலில் அடிபட்டு முதியவர் பலி: போலீசார் விசாரணை

திருப்பூர், அக். 19

திருப்பூர் வஞ்சிபாளை யம் இடையே சிக்கண்ணா அரசு கல்லூரி அருகே 55 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் ரெயிலில் அடிபட்டு பிணமாக கிடப்பதாக திருப்பூர் ரெயில்வே போலீஸசாருக்கு தகவல் கிடைத் தது.

தகவல் கிடைத்ததும் ரெயில்வே போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் லோக நாதன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் கொப்பரைகுறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்யப்படும்: கலெக்டர் தகவல்

திருப்பூர், அக். 19

விவசாயிகளின் விளைபொரு ட் களுக்குஉரியவிலைகிடைக்கவும், வருவாயைப் பெருக்கவும் தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தென்னை சாகுபடி செய்த விவசா யிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் விளைவித்த கொப்பரை யினை விலை ஆதரவு திட்டத்தின் கீழ் கூடுதலாக 6600 மெ.டன் அரவை கொப்பரை மற்றும் 400 மெ.டன் பந்து கொப்பரை ஆகிய னவற்றை கொள்முதல் செய்திட தற்போது 26.11.2023 முடிய கால நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள் ளது. நிர்ணயிக்கப்பட்ட தரம், அளவு கொண்ட அரவைத் தேங் காய் கொப்பரை கிலோ ரூ.108.60 க்கும் பந்து தேங்காய் கொப்பரை கிலோரூ.117.50 க்கும்; மத்திய அரசின் நாபெட் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய உத்தர விடப்பட்டு 01.04.2023 முதல் 30.09.2023 முடிய 11143 விவசா யிகளிட மிருந்து ரூ.172.928 கோடிக்கு அரவை கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் விவசாயிகள் நிலத்தின் சிட்டாஅடங்கல், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கிக் கணக்குஆகி யவிவரங்களுடன் தங்கள் பகுதி ஒழுங்கு முறை விற்பனைக் கூட கண்காணிப்பாளரை அணுகி பதிவு செய்து கொள்ளலாம். காங் கயம் (கைப்பேசிஎண்: 9940919150), பொங்கலூர் (கைப் பேசிஎண்: 9942420525), பெதப் பம்பட்டி (கைப்பேசிஎண்: 9710921187), அலங்கியம் (கைப் பேசிஎண்: 9385820581), மூல னூர் (கைப்பேசிஎண்: 9865425708), உடுமலைப் பேட்டை (கைப்பேசிஎண்: 9443962834) மற்றும் சேவூர் (கைப்பேசிஎண்: 9842931585) மேலும், தேங்காய் கொப்பரைக்கு உரிய தொகை விவசாயிகளின் வங் கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

தமிழ்நாடு அரசு தென்னை விவ சாயிகளின் நலனுக்காக மேற் கொண்டுள்ள இந்தகொப்பரைக் கொள்முதல்திட்டத்தில்தென்னை விவசாயிகள் அதிக அளவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள் ளார்கள்.

## கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்க வேண்டும்: எச்.எம்.எஸ். வலியுறுத்தல்

திருப்பூர், அக். 19

எச்எம்எஸ்., தொழிற்சங்கம் சார் பில் திருப்பூர் மாவட்டத் தலைவர் ஆர்.முருகன், மாவட்டச்செயலா ளர் முத்துசாமி ஆகியோர் கலெக்ட ரிடம் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது:

முன்னாள் முதல்வர் கருணாநிதி யால் தமிழகத்தில் கட்டுமானம் மற் றும் உடல் உழைப்பு தொழிலாளர்க ளுக்கு என தனித்தனியாக 18 நலவாரியங்கள் அமைக்கப்பட் டுள்ளன.

இந்த நலவாரியங்களில் தற்போது 40 லட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இந்த தொழிலாளர் கள் அனைவருக்கும் தீபாவளி போனஸ் தொகையாக ரூ.7 ஆயிரம் வழங்க வேண்டும். கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடு கட்ட மானியம் பெறும் நடைமுறையை எளிமைப்படுத்த வேண்டும். தமிழ கத்தில்கட்டுமானம்மற்றும்அமைப் புசாரா தொழிலாளர்களுக்கான 18 நலவாரியங்களிலும் ஒரே மாதிரி யான இணையதள நடைமுறை யைப் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாலக்காடு, திருச்செந்தூர் ரெயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்க வேண்டும்: பயணிகள் நலச்சங்கத்தினர் வலியுறுத்தல்



உடுமலை, அக். 19

பொள்ளாச்சி ரெயில் நிலையத்தை ஆய்வு செய்ய வந்த, தெற்கு ரெயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங்கை சந்தித்து பொள்ளாச்சி ரெயில் பயணிகள் நலச்சங்கத்தினர் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது:

உடுமலை வழியாக பொள்ளாச்சி கோவை இடையே காலை மற்றும் மாலை இயக்கப்படும் ரெயிலை வாரத்தின் அனைத்து நாட்களும் இரு திசைகளில் இருந்தும் இயக்க வேண்டும்.தற்போது கோவையில் இருந்து பொள்ளாச்சிக்கு சனிக்கிழமை மாலை ரெயில் இல்லை.பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு ஞாயிறு காலை ரெயில் இல்லை. கோவை மதுரை ரெயில் கோவையில் இருந்து பொள்ளாச்சிக்கு வர 58 நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொள்கிறது. பொள்ளாச்சி கோவை இடையே காலை மற்றும் மாலை இயக்கப்படும் ரெயில் வேகத்தையும், மதுரை கோவை மதுரை ரெயிலின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டும். பொள்ளாச்சி கோவை இடையே பயண நேரத்தை, 50 நிமிடங்களாக குறைக்க வேண்டும். பொள்ளாச்சி மேட்டுப்பாளையம் இடையே நேரடி ரெயில்கள் இயக்க வேண்டும். பொள்ளாச்சியில் இருந்து சென்னை எழும்பூர் அல்லது தாம்பரம் ஆகிய ஊர்களுக்கு பழநி, திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம் வழியாக வந்தே பாரத் அல்லது விரைவு ரெயில்கள் தினமும் இயக்க வேண்டும். பொள்ளாச்சி பாலக்காடு வழித்தடத்தில் கூடுதல் ரெயில்கள் இயக்க வேண்டும். எர்ணாகுளம் பாலக்காடு மின்சார ரெயிலை, பொள்ளாச்சி வரை நீட்டிக்க வேண்டும்.பொள்ளாச்சி, பழநி, மதுரை வழியாக குருவாயூர் ராமேஸ்வரம் வந்தே பாரத் ரெயிலை இயக்க வேண்டும்.

பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் மீட்டர் கேஜ் காலங்களில் இருந்தது போன்று,ரெயில் பராமரிப்பு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, இங்கு இருந்து நேரடியாக பல்வேறு இடங்களுக்கு ரெயில்களை இயக்க வேண்டும்.பொ ள்ளாச்சி அல்லது கோவையில் இருந்து, காரைக்கால் அல்லது வேளாங்கண்ணி ஆகிய ஊர்களுக்கு பழநி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை வழியாக விரைவு ரெயில்களை இயக்க வேண்டும்.

இது குறித்து மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பில் கொடுத்த மனுவில், பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு கல்வி, மருத்துவம், தொழில் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வருகின்றனர். இதற்காக, பொது போக்குவரத்துக்கு பஸ்சை பயன்படுத்துகின்றனர். எனவே பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு 6 முறை ரெயில்விட வேண்டும்.

பொள்ளாச்சியில் இருந்து சென்னை செல்ல கோவை வழியாக ரெயில் இயக்கிட வேண்டும். கேரளா துறைமுக நகரமான கொச்சியில் இருந்து தமிழக துறைமுக நகரமான தூத்துக்குடிக்கு தினசரி ரெயில் இயக்க வேண்டும்.முன்பு இருந்துள்ள பாலக்காடு பொள்ளாச்சி பயணிகள் ரெயில் தினசரி இயக்க வேண்டும். கோவையை தலைமையிடமாகக்கொண்டு, பொள்ளாச்சி ரெயில்வே நிலையத்தை உள்ளடக்கிய புது ரெயில்வே கோட்டம் உருவாக்கிட வேண்டும்.

தமிழ்நாடு பனை, தென்னை தொழிலாளர் சங்கத்தினர் கொடுத்த மனுவில், குறைவான பெட்டிகளுடன் இயங்கிகொண்டு இருக்கும் பாலக்காடு திருச்செந்தூர் ரெயிலில் கூடுதல் பெட்டிகளை இணைக்க வேண்டும். மதுரை கோவை மதுரை இயக்கப்படும் ரெயிலை, திருச்செந்தூர் வரை நீட்டிக்க வேண்டும். சென்னைக்கு அதிவிரைவு ரெயில் இயக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.



அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், நத்தக்காடையூர் ஊராட்சி வேட்டைக்காரன் புதூரில் கால்நடை பராமாரிப்புத்துறையின் சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை தொடங்கி வைத்தார்.

# முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்

திருப்பூர்: அக். 19

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தொழிற்படிப்பு மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளை தேர்ந்தெடுத்து படிக்கும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை வழங்கப்படவுள்ளது. ஒரு வருடத்திற்கு பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை மாணவர்களுக்கு ரூ.30,000 எனவும், மாணவிகளுக்கு 36,000 எனவும் வழங்கப்படுகிறது.பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்திட கடைசி தேதி 30112023 ஆகும்.

மேலும் விவரங்கள் அறிந்திட திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது தொலைபேசி எண் 04212971127 வாயிலாகவோ தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. இவ்வாய்ப்பினை முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் பயன்படுத்திகொண்டு 30112023க்குள் *www.ksb.gov.in* என்ற கே.எஸ்.பி., இணையதளத்தில் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து பயனடையுமாறு கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

# 18 வயது பூர்த்தியான இளைஞர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வேண்டும்: தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

திருப்பூர், அக். 19

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதிகளில், 23.16 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். கலெக்டர் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சியினர் முன்னிலையில் 27 ந் தேதி வாக்காளர் வரைவு பட்டியல் வெளியிடப்படுகிறது.

முன்னதாக, கடந்த ஜூன் மாதம் முதல் திருத்த பணிகள் நடைபெற்றுவருகின்றன. ஓட்டுச்சாவடி நிலை அலுவலர்கள், வீடு வீடாக சென்று வாக்காளர் சரிபார்ப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். புதிதாக 7 ஓட்டுச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு மாவட்ட மொத்த ஓட்டுச்சாவடி எண்ணிக்கை 2,520 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஓட்டுப்பதிவு எந்திரங்கள் சரிபார்க்கப்பட்டு, கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள ஸ்ட்ராங் ரூமில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. வரைவு பட்டியல் வெளியிடப்பட்டு, வரும் 27ந் தேதி முதல் டிசம்பர் மாதம் வரை வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்த பணிகள் நடைபெறுகின்றன. அனைத்து ஓட்டுச்சாவடி மையங்களிலும், நவம்பர் மாதம் 4, 5 மற்றும் 18, 19ந் தேதிகளில் சுருக்கமுறை திருத்தத்துக்கான சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. சுருக்கமுறை திருத்தத்தின்போது, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், திருத்தங்கள் நடைபெறுகிறது. இதற்காக, திருப்பூர் மாவட்ட தேர்தல் பிரிவுக்கு 3 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாநகராட்சி உதவி கமிஷனர், தாசில்தார்களுக்கு அனுப்பிவைக்கப்ப ட்டுள்ளது. இந்த விண்ணப்பங்கள், ஓட்டுச்சாவடி மையங்களில், சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும்.

*Voters.eci.gov.in* என்கிற இணையதளம், *VSP* மொபைல் செயலி வாயிலாகவும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தங்களுக்கு விண்ணப்பிக்கலாம். சுருக்கமுறை திருத்தம் முடிவடைந்து வரும் 2024 ஜனவரி 5ந் தேதி வாக்காளர் இறுதி பட்டியல் வெளியிடப்பட உள்ளது. பாராளுமன்ற தேர்தலுக்கான பட்டியல் என்பதால், இந்தாண்டுக்கான வாக்காளர் சுருக்கமுறை திருத்த பணி முக்கியத்துவம் பெறுகிறது.

வீடுவீடாக செல்லும் ஓட்டுச்சாவடி நிலை அலுவலர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்வதற்காக, இறந்தோர் விவரங்கள், பெயர் சேர்ப்பதற்காக புதியவர் விவரங்களையும் சேகரித்து வருகின்றனர்.

வருகிற 27ந் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, கலெக்டர் அலுவலகம், அனைத்து தாலுகா அலுவலகங்கள், ஓட்டுச்சாவடி மையங்களில் ஒட்டப்படும். வாக்காளர்கள் தவறாமல் வரைவு பட்டியலை பார்வையிட வேண்டும். குடும்ப உறுப்பினர்களின் பெயர், புகைப்பட விவரங்கள், முகவரி, தொகுதி சரியாக உள்ளனவா என சரி பார்க்க வேண்டும். மாறுதல்கள் இருப்பின் சுருக்கமுறை திருத்த காலத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்களை சேர்ப்பதில், தேர்தல் கமிஷன் அதிக கவனம் செலுத்திவருகிறது. இதற்காக தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வருகிற ஜனவரி 1ந் தேதி 18 வயது பூர்த்தியாகும் இளைஞர்கள், தவறாமல், தங்களை வாக்காளராக சேர்த்துக் கொள்ளவேண்டும் என தேர்தல் ஆணையம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்கள் புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்கலாம்



நாமக்கல், அக். 19

கல்வி உதவித்தொகை பெறும்பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்கள் ஆன்லைன் மூலம் புதுப்பித்தலுக்கு நாளை முதல்விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் உமா தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், தனியார் தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிக பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது.அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்மாணவ, மாணவிகளுக்கு இலவசகல்வித் திட்டத்தின் கீழ் எவ்வித நிபந்தனையுமின்றி கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. முதுகலை, பாலிடெக்னிக், தொழிற்படிப்பு போன்ற பிற படிப்புகளுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

நடப்பாண்டில் புதுப்பித்தல் மாணாக்கர்கள் *https://ssp.tn.gov.in* என்ற இணையதள முகவரியில் மாணவர்களின் உள்ளீடு சென்று ஆதார் எண் அளித்து இகே.ஒய்.சி. சரிபார்த்தல் செய்ய வேண்டும். இதில் ஏதாவது இடர்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் தங்கள் கல்லூரியில் உள்ள கல்வி உதவித்தொகை உதவியாளரை ஆதார் எண் நகலுடன் அணுகவும். கல்வி உதவித்தொகை இணையதளம் புதுப்பித்தலுக்கு கடந்த 11ந் தேதி முதல் செயல்பட தொடங்கின. புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள் மாணவர்களால் அடுத்தமாதம் (நவம்பர்) 18ந் தேதிக்குள் இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் விவரங்களுக்கு தங்கள் கல்லூரியில் உள்ள கல்வி உதவித்தொகை உதவியாளரையோ அல்லது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்உள்ளமாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தையோ அணுகலாம்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# சினிமா தியேட்டர்களில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் புகார்

விருதுநகர், அக். 19

விருதுநகர் மாவட்டத்தில் லியோ திரைப்படம் நாளை முதல் 24ந் தேதி வரை 5 காட்சிகள் திரையிட அனுமதிக்கப்பட்டுள்ளது. சினிமா தியேட்டர்களில் கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்பட்டால் பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். காலை 9 மணிக்கு முதல் காட்சி தொடங்கப்பட வேண்டும். இரவு காட்சி நள்ளிரவு 1:30 மணிக்கு முன்பு முடிக்க வேண்டும். மேற்படி சினிமா தியேட்டர்களில்காலை9மணிக்கு முன்பாக திரைப்படம் திரையிட அனுமதி இல்லை. சினிமா தியேட்டர்களில் நுழைவு கட்டணம் அதிகமாக வசூல் செய்வது போன்ற விதிமுறைகள்மீறல் தொடர்பான புகார்களை பொதுமக்கள் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் மற்றும் துணை போலீஸ்சூப்பிரண்டு, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆகியோரிடம் தெரிவிக்கலாம். இதுகுறித்து புகார் ஏதேனும் இருந்தால் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் 94450 00475, சிவகாசி கோட்டாட்சியர் 94450 00474, சாத்தூர் கோட்டாட்சியர் 63745 59271, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) 94450 08161, துணை போலீஸ் சூப்பிரண்டுகள் அருப்புக்கோட்டை 94981 89075, திருச்சுழி 98656 95944, விருதுநகர் 63790 47041, சிவகாசி 98847 41609, சாத்தூர் 98424 23228, ஸ்ரீவில்லிபுத்தூர் 94981 05360, ராஜபாளையம் 98842 15769 என்ற செல்போன் எண்ணில் தெரிவிக்கலாம். மேற்கண்ட தகவலை கலெக்டர் ஜெயசீலன் கூறினார்.

# குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெறலாம் எனக்கூறி வாலிபரிடம் ரூ.1½ லட்சம் மோசடி; மர்ம நபருக்கு வலை

விழுப்புரம், அக். 19

செஞ்சி தாலுகா கணக்கன்குப்பத்தை சேர்ந்தவர் சக்திவேல் (வயது 19). இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது இன்ஸ்டாகிராமை பயன்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது பகுதிநேர வேலை என வந்ததை கிளிக் செய்ததும் வாட்ஸ் அப் மூலம் நேரடியாக இணைப்பு கொடுக்கப்பட்டது. பின்னர் அதிலிருந்து தொடர்புகொண்ட மர்ம நபர் ஒருவர், தான் ஸ்னேப்டீல் ஆன்லைன் நிறுவனத்தின் நேர்காணல் நடத்துபவர் என்றும் பகுதி நேர வேலையாக டாஸ்க் முடித்தால் 5 நிமிடத்திற்குள் ரூ.500 முதல் ரூ.10 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம் என்று கூறி ஒரு லிங்கை அனுப்பி வைத்துள்ளார். உடனே சக்திவேல், அந்த லிங்கினுள் சென்று தனது விவரங்களை பதிவு செய்ததுடன் தனக்கான பயனர் முகவரி, பாஸ்வேர்டு ஆகியவற்றை பதிவேற்றம் செய்தார்.

அதன் பின்னர் டெலிகிராம் ஐடி மூலம் சக்திவேலை தொடர்பு கொண்ட நபர், சிறிய தொகையை முதலீடு செய்து டாஸ்க் முடித்தால் அதிக லாபம் பெறலாம் எனக்கூறினார். இதை நம்பிய சக்திவேல், அந்த நபர் கூறிய வங்கிகளின் கணக்குகளுக்கு ரூ.1 லட்சத்து 68 ஆயிரத்து 132ஐ 10 தவணைகளாக அனுப்பி வைத்துள்ளார். ஆனால் டாஸ்க் முடித்த பின்னரும் சக்திவேலுக்கு சேர வேண்டிய பணத்தை திருப்பித்தராமல் அந்த நபர் ஏமாற்றி மோசடி செய்துவிட்டார்.

இதுகுறித்து சக்திவேல், விழுப்புரம் சைபர்கிரைம் பிரிவு போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபரை வலை வீசி தேடி வருகின்றனர்.

# மருந்து விற்பனை பிரதிநிதிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்




வேலூர், அக். 19

தமிழ்நாடு மருந்து மற்றும் விற்பனை பிரதிநிதிகள் சங்கம் வேலூர் கிளை சார்பில் வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் கெஜராஜ் தலைமை தாங்கினார். மாநில தலைவர் சத்தியநாராயணன், மாநிலக்குழு உறுப்பினர் ஜனார்த்தனன், மாவட்ட செயலாளர் அருள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் மீதான ஜி.எஸ்.டி. வரியை குறைக்க வேண்டும். 8 மணி நேரம் வேலை நிர்ணயம் செய்ய வேண்டும். குறைந்தபட்சம் ரூ.26 ஆயிரம் சம்பளம் வழங்க வேண்டும். மருந்து விற்பனையில் டார்கெட் நிர்ணயிப்பதை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்பட 8 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினார்கள். இதில் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் செயற்குழு உறுப்பினர் தாமோதரன் நன்றி கூறினார்.

# வெறிநாய் கடித்ததில் 6 பெண்கள் உள்பட 20 பேர் காயம்

திருவண்ணாமலை, அக். 19

திருவண்ணாமலையை அடுத்த துரிஞ்சாபுரம் ஒன்றியம் தேவனாம்பட்டு கிராமத்தில் நேற்று வெறிபிடித்த நாய் ஒன்று சுற்றிக் கொண்டிருந்தது. அந்த வழியாக சென்றவர்களை வெறிநாய் விரட்டி விரட்டி கடித்தது. இதில் 6 பெண்கள் உள்பட 20 பேரை கடித்தது. காயம் அடைந்த அவர்கள் அருகில் உள்ள நார்த்தாபூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று முதலுதவி சிகி ச்சை பெற்றனர். இவர்களில் சிலர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனிடையே 20 பேரை கடித்த வெறிநாயை அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் சுற்றி வளைத்து பிடித்து அடித்து கொன்றனர். இதனால் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# திருவள்ளூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர், அக். 19

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும், பொது பிரச்சனைகள் தொடர்பாகவும் உதவிகள் வேண்டியும் மனுக்களை அளித்தனர்.

இக்கூட்டத்தில் நிலம் சம்பந்தமாக 77 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 59 மனுக்களும், வேலை வாய்ப்பு வேண்டி 76 மனுக்களும், பசுமை வீடு மற்றும் அடிப்படை வசதிகள் வேண்டி 54 மனுக்களும் இதர துறைகள் சார்பாக 93 மனுக்களும் என மொத்தம் 359 அணுக்கள் பெறப்பட்டது.

# நடிகர் விஜய் அரசியலுக்கு வருவார் என்பதால் நெருக்கடி கொடுக்கிறார்கள்: சீமான் குற்றச்சாட்டு

சென்னை, அக். 19

வருகிற நாடாளுமன்ற தேர்தலில், யாருடனும் கூட்டணி கிடையாது. மக்களை நம்பி தான் நான் இருக்கிறேன். நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். வெற்றி பெறுவோம். கல்வி, மருத்துவம், தண்ணீர் என எல்லாற்றையும் விற்று விட்ட நிலையில், தற்போது குழந்தைகளை விற்று வருகின்றனர். மூளைச்சாவு என்ற நோயை உருவாக்கி, மனிதனின் உடல் உறுப்புகளை விற்கின்றனர். ஒழுகும் பள்ளிகளை சீரமைக்க முடியாத அரசு, பல கோடி ரூபாய் செலவு செய்து சமாதி கட்டுகிறது. தமிழக முதல்அமைச்சர் தேர்தல் வாக்குறுதிகளை, 100 சதவீதம் நிறைவேற்றி விட்டேன் எனக் கூறி வருகிறார். ஆனால் ஆசிரியர்கள், செவிலியர்கள் எதற்காக போராட்டம் நடத்துகின்றனர்?. மகளிர் உரிமை தொகைக்கு ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடி தமிழக அரசு செலவு செய்கிறது. யாருடைய பணத்தை செலவு செய்கிறார்கள்?. 60 ஆண்டுகளாக, திராவிட கட்சிகள் மக்களை ஏமாற்றி வருகின்றன. ''ஜெயிலர்' திரைப்படத்திற்கு எந்த வித இடையூறும் வரவில்லை. நடிகர் விஜய் நடித்த 'லியோ' படத்திற்கு, இசை வெளியீட்டு விழாவில் இருந்தே பிரச்சினைதான். காரணம், நடிகர் விஜய் கட்சி தொடங்கி, அரசியலுக்கு வருவார் என்பதால் தான் கடும் நெருக்கடி கொடுக்கின்றனர். அவர் நடிப்பதை நிறுத்தி விட்டால் என்ன செய்யமுடியும். தேவையில்லாமல் நடிகர் விஜயை சீண்டி விட்டீர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரையில் வருமான வரி பிடித்தம் விழிப்புணர்வு கூட்டம்

மதுரை, அக். 19

மதுரையில் கருவூல கணக்குத் துறையின் கீழ் வரும் சம்பள பட்டுவாடா அதிகாரிகளுக்கான முன்கூட்டியே வருமான வரி பிடித்தம் செய்வது குறித்த விழிப்புணர்வு கூட்டம் இணை ஆணையர் ஹரி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்கூட்டியே வருமான வரி பிடித்தம் செய்வதன் அவசியம் மற்றும் விதிமுறைகள் குறித்து விளக்கிப் பேசினர். முன்கூட்டியே வருமான வரி பிடித்தம் செய்வதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்து வருமான வரி துணை ஆணையர் மதுசூதனன் மற்றும் ஆய்வாளர் ஜவகர் ஆகியோர் எடுத்துரைத்தனர்.



# வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு தமிழக முதல்வர் ஆறுதல்



சிவகாசி,அக்.19

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் சில வாரங்களே இருப்பதால் சிவகாசி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பட்டாசு ஆலைகளில் பட்டாசு உற்பத்தி மும்முரமாக நடந்து வருகிறது.

சிவகாசி கங்காகுளம் பகுதியைச் சேர்ந்தவர் ராமசாமி. இவருடைய மகன் சுந்தரமூர்த்தி (வயது 43). இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை ரெங்கப்பாளையம் கிராமத்தில் இயங்கி வருகிறது.

இந்த பட்டாசு ஆலையையொட்டி சுந்தரமூர்த்தி என்பவரின்பட்டாசுகடையும், பட்டாசு சேமிப்பு கிடங்கும் இயங்கி வந்தன. அந்த கடைக்கு பின்புறமாக அமைத்து இருந்த 3 அறைகளில் கடைக்கு விற்பனைக்காக பட்டாசு 'கிப்ட் பாக்ஸ்'களை தயார் செய்யும் பணியில் பெண்கள் ஈடுபட்டு வந்தனர். இந்த பணியில் 3 அறைகளிலும் நேற்று மதியம் பெண்கள் மும்முரமாக இருந்தனர்.

அந்த நேரத்தில் வெளிப்புறமாக இருந்த கடைக்கு பட்டாசுகள் வாங்க வெளியூரில் இருந்து சிலர் வந்திருந்தனர். அவர்கள் புதிய வகை பட்டாசுகளை தேர்வு செய்தனர்.

அதில் சில பட்டாசுகளை எடுத்து கடையின் வெளியே வைத்து வெடித்து விபரீத செயலில் ஈடுபட்டதாக தெரியவருகிறது. அப்போது, அதில் ஒரு பட்டாசு வெடித்து கடைக்குள் விழுந்ததாகவும், உடனே கடையில் இருந்த பட்டாசுகளில் தீப்பொறி பட்டு வெடித்துச்சிதற தொடங்கியதாகவும் தெரியவருகிறது.

கடையின் பின்புறம் அமர்ந்து பட்டாசு கிப்ட் பாக்ஸ் செய்துகொண்டிருந்த பெண்களுக்கு என்ன நடக்கிறது என்பது தெரிவதற்குள், அங்கும் பட்டாசுகள் வெடித்துச்சிதறி புகை மண்டலமாக மாறியது. தொடர்ந்து பட்டாசுகள் பயங்கர சத்தத்துடன் சிதறிய வண்ணமாக இருந்ததால் யாராலும் அருகில் நெருங்க முடியவில்லை. கடையின் உள்ளே இருந்தும் பெண்களால் வெளியே வர முடியாமல் அவர்கள் அலறினர். சற்று நேரத்தில் ஒருவர்பின் ஒருவராக உடல்கருகி பலியான கொடுமை அரங்கேறியது.

இதற்கிடையே வெடிவிபத்து பற்றி அறிந்ததும் எம்.புதுப்பட்டி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

சிவகாசி தீயணைப்பு படை வாகனங்கள் சற்று நேரத்தில் வந்தன. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேர போராட்டத்துக்கு பின்னர் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. பின்னர் அங்கு கண்ட காட்சி போலீசாருக்கும், தீயணைப்பு படையினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தது. பலியானவர்கள் உடல்கள் ஆங்காங்கே கருகி கிடந்தன. அவற்றை மீட்டு உடனடியாக பரிசோதனைக்காக போலீசார் அனுப்பி வைத்தனர்.

பெண்கள் உள்பட மொத்தம் 13 பேரின் உடல்கள் அங்கிருந்து மீட்கப்பட்டன. அவற்றை அடையாளம் காண்பதற்காக அந்த பட்டாசு கடைக்கு பணிக்கு வந்தவர்கள், கிப்ட் பாக்ஸ் செய்யும் பணிக்கு வந்த பெண்கள் யார்யார்? என்ற விவரங்களை சேகரித்து போலீசார் விசாரணையை தொடங்கினர்.

அதன்பின்னர், பலியான 13 பேரின் பெயர்கள் விவரமும் தெரியவந்தது. அது வருமாறு:

1. வடக்கு அழகாபுரி இந்திராநகரை சேர்ந்த ஸ்ரீசீனிராஜ் என்பவருடைய மனைவி மகாதேவி (வயது50)

2. வடக்கு அழகாபுரி நாகராஜ் மனைவி பஞ்சவர்ணம் (35)

3. இதே பகுதியை சேர்ந்த தாளமுத்து மனைவி தமிழ்ச்செல்வி (55) 4. மூவரை வென்றானைச் சேர்ந்த குருக்கலாஞ்சி மனைவி முத்துலட்சுமி (36).

5. எஸ்.அம்மாபட்டியைச் சேர்ந்த முனீசுவரி (32)

6. அழகாபுரி மகேந்திரன் மகள் தங்கமலை.

7. காந்தி நகர் முனியப்பன்மனைவி அனிதா (40).

8. லட்சுமியாபுரம் ஜெயமுருகன் மனைவி பாக்கியலட்சுமி (35).

9. இதே பகுதியை சேர்ந்த சுப்புக்கனி மனைவி குருவம்மாள் (55)

10. அம்மாபட்டி காளிராஜன் மனைவி லட்சுமி (28).

11. லட்சுமியாபுரத்தை சேர்ந்த முருகானந்தம் மனைவி இந்திரா (50).

12. மூவரை வென்றான் கிராமத்தை சேர்ந்த முனியாண்டி மனைவி செல்லம்மாள் (40)

13.வடக்கு அழகாபுரி முத்து ராஜ் மகன் பாலமுருகன் (30)

இந்தசம்பவத்தில் சங்கர் என்பவருடைய மனைவி சின்னத்தாய் (35), ஆறுமுகம் மனைவி பொன்னுத்தாய் (45) ஆகியோர் தீக்காயத்துடன் உயிர் தப்பினர்.

வெடி விபத்து நடந்த இடத்தை விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், மதுரை சரக போலீஸ் டி.ஐ.ஜி. ரம்யா பாரதி, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சீனிவாச பெருமாள் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டு, மீட்பு பணிகளை துரிதப்படுத்தினர்.

இந்த வெடி விபத்து குறித்து எம்.புதுப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சிவகாசியை அடுத்த திருத்தங்கலைச் சேர்ந்தவர் முத்துவிஜயன். இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை கிச்சநாயக்கன்பட்டி கிராமத்தில் இயங்கி வருகிறது. இந்த ஆலையில் உள்ள ஒரு அறையில் நதிக்குடியை சேர்ந்த வேம்பு (வயது 60) என்பவர் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென உராய்வு காரணமாக வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த வெடி மருந்து தீப்பற்றி எரிந்தது. இதில் வேம்பு உடல் கருகி பரிதாபமாக இறந்தார்.

கடந்த சில நாட்களில் மயிலாடுதுறை, அரியலூர், ஒசூர் அருகே நடந்த பட்டாசு வெடி விபத்துகளை தொடர்ந்து தற்போது நடந்துள்ள இந்த சம்பவங்கள் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:


விருதுநகர் மாவட்டம் சிவகாசி தாலுகா மாரனேரியை அடுத்த கிச்சநாயக்கன்பட்டி மற்றும் மங்களம் கிராமத்தில் இயங்கிவந்த தனியாருக்கு சொந்தமான பட்டாசு ஆலைகளில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சமும், படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்க உத்தரவிட்டு உள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# சர்வதேச சைக்கிள் போட்டி பந்தய வீராங்கனைகள் 2 பேருக்கு சைக்கிள்கள்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்



சென்னை, அக். 19

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற லட்சியத்தோடு, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கவும், விளையாட்டு சூழலை உருவாக்கிடவும் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அரசிற்கும், பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடம் இருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பயன்படுத்துவதற்கும், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டு கடந்த மே 8ந் தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினால் தொடங்கிவைக்கப்பட்டது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை நிர்வகிக்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் 7 பேர் கொண்ட குழு செயல்பட்டு வருகிறது.

இந்தநிலையில், இந்திய விளையாட்டு ஆணைய பயிற்சி முகாம்களில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்கின்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. டெல்லியில் நடைபெற்று வரும் பயிற்சி முகாமில் தமிழகத்தை சேர்ந்த சைக்கிள் பந்தய வீராங்கனை எஸ்.தன்யதா மற்றும் கவுகாத்தியில் நடைபெற்று வரும் பயிற்சி முகாமில் சைக்கிள் பந்தய வீராங்கனை அ.ஜெய்.ஜியோட்ஷ்னா ஆகிய இருவரும் சர்வதேச அளவிலான சைக்கிள் போட்டியில் பங்கேற்பதற்காக பயிற்சி பெற்று வருகின்றனர்.

அவர்கள் இருவரின் பயிற்சி பயன்பாட்டிற்காக தலா ரூ.16 லட்சம் வீதம் மொத்தம் ரூ.32 லட்சம் மதிப்பிலான நீண்ட தூரம் இயங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள 2 சைக்கிள்களை "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" நிதியில் இருந்துதமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைஅமைச்சர்உதயநிதி ஸ்டாலின் சென்னையில் உள்ள தனது இல்லத்தில் நடைபெற்றநிகழ்ச்சியில் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர்அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மாநகராட்சி ஊழியர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி



கோவை, அக். 19

கோவை மாநகராட்சியில் பணியாற்றி வரும் ஊழியர்கள் அனைவரும் பாலியல் துன்புறுத்தல் தடுப்புசட்டத்தைதெரிந்து கொள்ளும் வகையில் தகவல் பலகை வெளியிடும் நிகழ்ச்சி மற்றும் இந்த சட்டம் குறித்து மாநகராட்சி ஊழியர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடந்தது. மேயர் கல்பனா, ஆணையாளர் மு.பிரதாப் ஆகியோர் கலந்து கொண்டு தகவல் பலகையை வெளியிட்டனர். அத்துடன் இதில் கலந்து கொண்ட ஊழியர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பின்னர் விழிப்புணர்வு பயிற்சி நடந்தது. இதன் மூலம் வேலை செய்யும் இடத்தில் பாலியல் தொடர்பான வன்முறை நீங்கி, அனைவருடன் நட்போடு பழகி செயல்பட ஏதுவாக அமைந்தது. அத்துடன் பெண் ஊழியர்கள் துன்புறுத்தப்பட்டால் செய்ய வேண்டியது குறித்தும் விளக்கிகூறப்பட்டது.

இதில் துணை ஆணையாளர் செல்வசுரபி, உதவி செயற்பொறியாளர் ஹேமலதா, உதவி ஆணையாளர் மாணிக்கம், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடலூரில் தொடரும் அரிசி விலை உயர்வு



கடலூர், அக். 19

இந்திய உணவில் குறிப்பாக, தென்னிந்தியாவில் அரிசியால் சமைக்கப்பட்ட உணவு முக்கிய இடம் வகிக்கிறது. இதில் ஒவ்வொரு வகை அரிசிக்கும், ஒவ்வொரு விதமான நிறம், ருசி, மருத்துவ குணங்கள் இருக்கின்றன. அந்த வகைகளுக்கு ஏற்ப விலை நிலவரமும் வேறுபட்டு காணப்படும். சந்தைகளில் பெரும்பாலும் அரிசியின் ரகத்திற்கு ஏற்ப விலை நிலவரம் இருக்கும். காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள் போலவே அரிசி விலை நிலவரத்திலும் ஏற்றத்தாழ்வு இருக்கும். அதன்படி கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக காய்கறிகள், மளிகைப் பொருட்கள் விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதேபோல் மக்கள் அன்றாடம் பயன்படுத்தக் கூடிய அரிசியின் விலையும் உயர்ந்துள்ளது. மத்திய அரசு தேசிய அளவில் அரிசி விலை உயர்ந்து வருவதை கட்டுப்படுத்த, அரிசி ஏற்றுமதிக்கு கடந்த ஜூலை 20ந் தேதி தடை விதித்தது. மேலும் புழுங்கல் அரிசிக்கு 20 சதவீத ஏற்றுமதி வரி விதிப்பை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இருப்பினும் தொடர்ந்து விலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆந்திரா, கர்நாடகம், மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வரத்து குறைந்தது தான் இந்த விலை உயர்வுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. அதனால் கடலூர் மாவட்டத்தில் அனைத்து ரக அரிசியின் விலையும் உயர்ந்துள்ளது. குறைந்தபட்சம் கிலோவுக்கு ரூ.2 முதல் அதிகபட்சமாக ரூ.10 வரை உயர்ந்துள்ளது. அதாவது கடந்த மாதம் ரூ.53க்கு விற்ற ஒரு கிலோ பொன்னி புழுங்கல் தற்போது 56க்கும், ரூ.52க்கு விற்பனையான அமெரிக்கன் பொன்னி ரூ.54க்கும், எச்.எம்.டி. பொன்னி ரூ.50ல் இருந்து ரூ.52 ஆகவும், பொன்மணி ரூ.36ல் இருந்து ரூ.40, ஐ.ஆர். 50 ரகம் ரூ.38ல் இருந்து ரூ.40, எச்.எம்.டி. அமெரிக்கன் ரூ.55ல் இருந்து ரூ.62, கோலம் அரிசி ரூ.65ல் இருந்து ரூ.70 ஆகவும், இடிசல் அரிசி ரூ.30ல் இருந்து ரூ.34, பாசுமதி அரிசி முதல்ரகம் ரூ.95ல் இருந்து ரூ.105 ஆகவும், 2வது ரகம் ரூ.75ல் இருந்து ரூ.80 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

இதேபோல் சீரக சம்பா, கிச்சடி சம்பா, கருப்பு கவுனி, வரகு அரிசி, சாமை அரிசி உள்ளிட்ட வகை அரிசியின் விலையும் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை உயர்ந்துள்ளது. ஏற்கனவே அனைத்து வகை அத்தியாவசிய பொருட்களின் விலையும் உயர்ந்து வரும் நிலையில், தற்போது அரிசி விலையும் படிப்படியாக அதிகரித்து வருவது இல்லத்தரசிகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

# பட்டாசு விற்பனை உரிமம் பெற்றவர்கள் விதிமீறல் குறித்த ஆய்வுக்கூட்டம்



தர்மபுரி, அக். 19

தர்மபுரி மாவட்டத்தில் பட்டாசு விற்பனை உரிமம் பெற்றவர்கள் விதிமீறலில் ஈடுபட்டால் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆய்வுக்கூட்டத்தில் கலெக்டர் சாந்தி பேசினார்.

தர்மபுரி மாவட்டத்தில் தீ விபத்து தடுப்பு தொடர்பான ஆய்வுக்கூட்டம் கலெக்டர்அலுவலகத்தில் நடைபெற்றது. கலெக்டர் சாந்தி தலைமை தாங்கினார். மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன்ஜேசுபாதம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பட்டாசு கடைகளை ஆய்வு செய்யும் நடைமுறைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இதையடுத்து கலெக்டர் சாந்தி பேசுகையில், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள நிரந்தர மற்றும் தற்காலிக பட்டாசு கடைகளை கூட்டாய்வு செய்வதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

சீன தயாரிப்பு பட்டாசுகள் மற்றும் வெங்காய வெடிகள் விற்பனை, பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் 18 வயதுக்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை பணியில் அமர்த்துவது, உரிமத்தில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் பட்டாசுகளை இருப்பு வைப்பது ஆகிய விதிமீறல்கள் ஆய்வின்போது கண்டறியப்பட்டால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிமீறல்கள் தொடர்பாக சட்ட விதிகளின்படி பட்டாசு விற்பனை உரிமம் பெற்றவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைநிலையங்களில் விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மாவட்ட கட்டுப்பாட்டு அறை எண்களைதொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் தர்மபுரி உதவி கலெக்டர் கீதாராணி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் பழனிதேவி, கலால் உதவி ஆணையர் கண்ணன், மாவட்ட தீயணைப்பு அலுவலர் மகாலிங்கமூர்த்தி மற்றும் அரசுதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புறவழிச்சாலை விரிவாக்க பணியை தடுத்து நிறுத்தி கிராம மக்கள் போராட்டம்



சீர்காழி, அக். 19

விழுப்புரம் முதல் நாகப்பட்டினம் வரை புறவழிச்சாலை நான்கு வழிச்சாலையாக விரிவாக்க பணிகள் கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக சீர்காழி அருகே கொள்ளிடம் முதல் கருவி வரை நான்கு வழிச்சாலை விரிவாக்க பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மேல செங்கமேடு, நத்தம் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் இதனால் வரை புறவழிச் சாலையை கடந்துதான் தங்களுடைய கிராமத்திற்கு சென்று வந்தனர். நேற்று மேற்கண்ட கிராமங்களுக்கு செல்லும் பாதையை அடைத்து புறவழிச் சாலை விரிவாக்க பணி மேற்கொள்ளப்பட்டது.

இதனை அறிந்த நத்தம் கிராமத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை விரிவாக்க பணியை தடுத்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் போது நத்தம் கிராமத்திற்கு செல்லும் புறவழிச் சாலையில் சுரங்கப்பாதை அமைத்து தர வேண்டும் அல்லது மேம்பாலம் அமைத்து தர வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த சீர்காழி உதவி கலெக்டர் அர்ச்சனா, துணை போலீஸ் சூப்பிரண்டு லாமேக், சீர்காழி தாசில்தார் இளங்கோவன், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சிவக்குமார், சிங்காரவேலன் ஆகியோர் நேரில் சென்று போராட்டக்காரரிடம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். அப்பொழுது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒரு வாரத்திற்குள் சுரங்கப்பாதை அல்லது மேம்பாலம் அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததன் பேரில் போராட்டக்காரர்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டனர்.

இந்த போராட்டத்தால் 3 மணி நேரம் சாலை விரிவாக்க பணி பாதிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை முன்னிட்டு புறவழிச் சாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல் மேல செங்கமேடு கிராம மக்களும் புறவழிச் சாலையில் தங்கள் கிராமத்திற்கு செல்ல சுரங்கப்பாதை அமைத்து தர கோரி சாலை விரிவாக்க பணியை தடுத்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சொத்து வரி செலுத்தாத 13 வீடுகளின் குடிநீர் இணைப்பு துண்டிப்பு

திண்டுக்கல், அக். 19

திண்டுக்கல் மாநகராட்சியின் வருமானத்தை பெருக்கும் வகையில், நிலுவையில் உள்ள வரியை வசூல் செய்வதற்கு அதிகாரிகளை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர், வார்டு வாரியாக சென்று வரி வசூலில் ஈடுபட்டு வருகின்றனர். அப்போது வரி செலுத்தாமல் நீண்டநாள் நிலுவையில் வைத்துள்ள நபர்களுக்கு நோட்டீஸ் வழங்குகின்றனர். அதன்பின்னரும் பலர் வரி செலுத்தாமல் உள்ளனர். எனவே சொத்துவரி, குடிநீர் வரி செலுத்தாத நபர்களின் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பை துண்டிக்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டு உள்ளனர். அதன்படி 15 வீடுகளின்குடிநீர்இணைப்பை துண்டித்தனர். இதைத் தொடர்ந்து நேற்று ரவுண்டுரோடு புதூர், நாகல்புதூர், சாமியார்தோட்டம், ஆர்.எம்.காலனி உள்ளிட்ட பகுதிகளில் சொத்து வரி, குடிநீர் வரி செலுத்தாத 13 வீடுகளின் குடிநீர் இணைப்பை அதிகாரிகள் துண்டித்தனர்.



## முத்த காட்சிக்கு கூடுதல் பணமா? வதந்தியால் காட்டமான நடிகை ராஷ்மிகா

முத்த காட்சியில் நடிக்க கூடுதல் சம்பளம் வேண்டும் என்று கட்டாயப்படுத்தி ராஷ்மிகா வாங்கி கொண்டதாக சமூக வலைத்தளங்களில் தகவல் பரவி உள்ளது.

தமிழில் கார்த்தியுடன் 'சுல்தான்', விஜய் ஜோடியாக 'வாரிசு' படங்களில் நடித்துள்ள ராஷ்மிகா மந்தனா, 'புஷ்பா' படம் மூலம் தெலுங்கிலும் பிரபலமானார். கன்னட படங்களிலும் நடித்து இருக்கிறார்.

இந்தியில் ரன்பீர் கபூருடன் ராஷ்மிகா நடித்துள்ள 'அனிமல்' படம் விரைவில் திரைக்கு வர உள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளிலும் டப்பிங் செய்து வெளியிடுகிறார்கள்.

'அனிமல்' படத்துக்கான போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டு உள்ளனர். அதில் ராஷ்மிகா மந்தனாவும், ரன்பீர் கபூரும் உதட்டோடு உதடு முத்தமிடும் காட்சி இடம்பெற்று உள்ளது. இந்த புகைப்படம் வைரலாகி ராஷ்மிகா ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

முத்த காட்சிக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். இன்னும் சிலர் ராஷ்மிகாவின் துணிச்சலை பாராட்டி உள்ளனர்.

இந்த நிலையில் முத்த காட்சியில் நடிக்க கூடுதல் சம்பளம் வேண்டும் என்று கட்டாயப்படுத்தி ராஷ்மிகா வாங்கி கொண்டதாக சமூக வலைத்தளங்களில் தகவல் பரவி உள்ளது. இதனால் காட்டமான ராஷ்மிகா மறுப்பு தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் தரப்பில் வெளியிட்ட அறிக்கையில், குறிப்பிட்ட காட்சியில் நடிப்பதற்காக கூடுதல் பணம் கேட்பது இல்லை என்றும், கதை பிடித்து இருந்தால் எந்த காட்சியிலும் நடிக்க சம்மதம் சொல்வதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## சிவகார்த்திகேயனுடன் இந்த ஜென்மத்தில் சேரமாட்டேன்.... டி.இமான் வேதனை



தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் டி. இமான் பல படங்களுக்கு பிசியாக இசையமைத்து வருகிறார். சில விஷயங்களை நான் மூடி மறைக்கிறேன் என்றால் அதற்கு காரணம் என் குழந்தைகளின் எதிர்காலம் தான்.


தமிழ் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளராக இருப்பவர் டி. இமான். இவர் ரஜினி, அஜித், விஜய், சூர்யா என பல முன்னணி நடிகர்களின் படங்களுக்கு இசையமைத்துள்ளார். தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் டி. இமான் பல படங்களுக்கு பிசியாக இசையமைத்து வருகிறார்.

இந்நிலையில், நடிகர் சிவகார்த்திகேயன் தனக்கு மிகப்பெரிய துரோகம் செய்துவிட்டதாக டி.இமான் கூறியுள்ளார். நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட அவர், "இந்த ஜென்மத்தில் சிவகார்த்திகேயனுடன் சேர்ந்து பயணிப்பது கடினம். அவர் எனக்கு செய்தது ஒரு மிகப்பெரிய துரோகம். அதை என்னால் வெளியே சொல்ல முடியாது. அதனால் இனி வரும் காலங்களில் அவருடன் சேர்ந்து பயணிக்க இயலாது.

ஒருவேளை அடுத்த ஜென்மத்தில் நானும் இசையமைப்பாளராக இருந்து, அவரும் நடிகராக இருந்தால் நடக்க வாய்ப்புள்ளது. இது நான் மிகவும் கவனத்துடன் எடுத்த முடிவு. அந்த துரோகத்தை நான் மிகவும் தாமதமாகத்தான் புரிந்து கொண்டேன். இது குறித்து அவரிடம் நேரடியாகவே கேட்டுவிட்டேன். ஆனால் அவரது பதிலை என்னால் சொல்லமுடியாது. சில விஷயங்களை நான் மூடி மறைக்கிறேன் என்றால் அதற்கு காரணம் என் குழந்தைகளின் எதிர்காலம் தான்" என்று கூறினார்.

சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'ரஜினிமுருகன்', 'சீமராஜா', 'நம்ம வீட்டுப் பிள்ளை' உள்ளிட்ட படங்களுக்கு டி.இமான் இசையமை த்திருந்தார். இந்த படங்களுக்கு பிறகு சிவகார்த்திகேயன் டி.இமான் கூட்டணி இணையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## திருநங்கையாக மாறிய ஜி.பி.முத்து



தங்கத்தினால் ஆன சொர்ணலட்சுமி அம்மன் சிலைக்கு சினேகா பிரசன்னா தங்களது கைகளால் அபிஷேகம் மற்றும் தீபாரதனை செய்தார். நடிகை சினேகா, பிரசன்னா ஆகியோர் பொற்கோவில் மடாதிபதி சக்தி அம்மாவை சந்தித்து ஆசி பெற்றனர்.

வேலூர் ஸ்ரீபுரம் தங்க கோவிலுக்கு பிரபல நடிகை சினேகா அவரது கணவர் பிரசன்னா மற்றும் அவரது குடும்பத்தினருடன் வந்தார். அவர்கள் ஸ்ரீ நாராயணி அம்மனை தரிசனம் செய்தனர். தங்கத்தினால் ஆன சொர்ணலட்சுமி அம்மன் சிலைக்கு தங்களது கைகளால் அபிஷேகம் மற்றும் தீபாரதனை செய்தார். பின்னர் கோவிலை சுற்றி வலம் வந்து தரிசித்தனர்.

இதனைத் தொடர்ந்து நடிகை சினேகா, பிரசன்னா ஆகியோர் பொற்கோவில் மடாதிபதி சக்தி அம்மாவை சந்தித்து ஆசி பெற்றனர். அவர்களுக்கு சக்தி அம்மா ஆசியளித்து, பிரசாதம் வழங்கினார். வேலூர் தங்க கோவிலில் சாமி தரிசனம் செய்ய வந்த சினேகாபிரசன்னா குடும்பத்தினருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து நடிகை சினேகா தனது கணவர் பிரசன்னா மற்றும் குடும்பத்துடன் விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர் கோவிலுக்கு சென்றனர். அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கவுரவித்து பிரசாதங்கள் வழங்கப்பட்டன. சினேகா வந்த செய்தி அனைவருக்கும் பரவியதால் கோவில் முன்பாக ரசிகர்கள் கூட்டம் அலை மோதியது.

தரிசனம் முடிந்த பின்னர் வெளியே வந்த சினேகாபிரசன்னாவை பார்த்த ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி பாதுகாப்பாக வழிஅனுப்பி வைத்தனர்.

## மிஸ்ஸான அஜித் படம்.. டோனியை இயக்கும் விக்னேஷ் சிவன்



தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனராக இருப்பவர் விக்னேஷ் சிவன். இவர் பல படங்களை இயக்கி முன்னணி இயக்குனராக உயர்ந்தார்.

2012ம் ஆண்டு சிம்பு நடிப்பில் வெளியான 'போடா போடி' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் விக்னேஷ் சிவன். அதன்பின்னர் விஜய் சேதுபதி மற்றும் நயன்தாரா நடிப்பில் வெளியான 'நானும் ரவுடி தான்' படத்தை இயக்கி தனக்கான ரசிகர்களை பிடித்தார். இதனை தொடர்ந்து தானா சேர்ந்த கூட்டம், காத்துவாக்குல ரெண்டு காதல் படங்களை இயக்கி முன்னணி இயக்குனராக உயர்ந்தார்.

இதையடுத்து லைகா நிறுவனம் தயாரிப்பில் அஜித் நடிக்கும் திரைப்படத்தை விக்னேஷ் சிவன் இயக்க இருந்த நிலையில் திடீரென அந்த படத்தினை இயக்குனர் மகிழ்திருமேனி இயக்குவதாக அறிவிப்பு வெளியானது. இது ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இயக்குனர் விக்னேஷ்சிவன், முன்னாள் கிரிக்கெட் வீரர் டோனியுடன் இணைந்துள்ளார். அதாவது டோனி மற்றும் யோகி பாபு நடிக்கும் விளம்பர படம் ஒன்றை விக்னேஷ் சிவன் இயக்கி வருகிறார். இதுதொடர்பான புகைப்படத்தை விக்னேஷ் சிவன் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதற்கு அஜித் படம் போனால் என்ன டோனியை இயக்குகிறார் என்று கமெண்ட் செய்து வருகின்றனர்.

## ராமேஸ்வரம் கோவிலில் லியோ படக்குழுவினர் சிறப்பு பூஜை வெற்றிக்காக பிரார்த்தனை



விஜய் நடித்துள்ள திரைப்படம் 'லியோ'. இந்த படம் அக்டோபர் 19 திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

நடிகர் விஜய் நடித்து, லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள லியோ திரைப்படம் நாளை மறுநாள் (அக்டோபர் 19) திரைக்கு வருகிறது. ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை இந்த படம் ஏற்படுத்தியுள்ள நிலையில் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் படத்தின் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் படம் வெற்றி பெற வேண்டி சிறப்பு பூஜையில் ஈடுபட்டார்.

முன்னதாக லோகேஷ் கனகராஜ் தலைமையில் 10 பேர் கொண்ட படக்குழுவினர் இன்று ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலுக்கு வருகை தந்தார். படக்குழுவினர் கோவிலில் உள்ள ராம நாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள் சன்னதியில் லியோ படத்தின் வெற்றிக்காக சிறப்பு பிரார்த்தனை நடத்தினர்.

இதுபற்றி தகவல் அறிந்த சுற்றுலா வந்தவர்கள் மற்றும் விஜய் ரசிகர்கள் கோவில் முன்பு திரண்டனர். அவர்கள் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் மற்றும் படக்குழுவினருடன் சேர்ந்து புகைப்படமும், செல்பியும் எடுத்துக்கொண்டனர்.

## சம்பளத்தை உயர்த்திய நயன்தாரா



'சஞ்சய் லீலா பன்சாலி' படத்தில் நடிக்க நயன்தாரா ரூ.13 கோடிக்கு மேல் கேட்பதாகவும், கேட்ட சம்பளத்தை கொடுக்க படக்குழுவினர் தயாராக இருப்பதாகவும் இந்தி பட உலகினர் பேசுகிறார்கள்.

தமிழ் திரையுலகின் பெண் சூப்பர் ஸ்டாராக கொடிகட்டி பறக்கும் நயன்தாரா அதிக சம்பளம் பெறும் தென்னிந்திய நடிகைகள் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறார். ஷாருக்கானின் 'ஜவான்' படம் மூலம் இந்திக்கும் போய் இருக்கிறார். 'ஜவான்' படம் ரூ.1,100 கோடிக்கு மேல் வசூல் செய்து இந்தி திரையுலகினரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. நயன்தாரா நடிப்புக்கும் பாராட்டுகள் கிடைத்தன.

'ஜவான்' படத்தால் நயன்தாராவுக்கு இந்தி பட உலகில் மவுசு கூடி உள்ளது. முன்னணி இந்தி நடிகர்கள் பலரும் தங்களுக்கு ஜோடியாக்க ஆர்வம் காட்டுகின்றனர். புகழ்பெற்ற இந்தி இயக்குனரும், தயாரிப்பாளருமான சஞ்சய் லீலா பன்சாலி பெரிய பட்ஜெட்டில் எடுக்க உள்ள பைஜூ பாவ்ரா என்ற படத்தில் ரன்பீர் கபூர், அலியாபட் ஆகியோர் நடிக்க உள்ளனர்.

இந்த படத்தில் நயன்தாராவை முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே 'ஜவான்' படத்தில் நடிக்க நயன்தாரா ரூ.10 கோடி சம்பளம் பெற்றதாகவும், 'சஞ்சய் லீலா பன்சாலி' படத்தில் நடிக்க ரூ.13 கோடிக்கு மேல் கேட்பதாகவும், நயன்தாரா கேட்ட சம்பளத்தை கொடுக்க படக்குழுவினர் தயாராக இருப்பதாகவும் இந்தி பட உலகினர் பேசுகிறார்கள்.

## உடல்நிலை பாதிப்பு காரணமாக உணவு பழக்க வழக்கங்களை மாற்றிய சமந்தா



நடிகை சமந்தாவுக்கு மயோசிடிஸ் என்ற தசை அழற்சி நோய் பாதிப்பு ஏற்பட்டது. இதற்காக சிகிச்சை பெற்றார். ஆனாலும் முழுமையாக குணமடையவில்லை. இதையடுத்து அமெரிக்காவில் சிகிச்சை பெறுவதற்காக சென்று இருக்கிறார். படங்களில் நடிப்பதையும் தற்காலிகமாக நிறுத்தி உள்ளார். உடல்நிலை பாதிப்பு காரணமாக உணவு பழக்க வழக்கங்களை சமந்தா முழுமையாக மாற்றி இருக்கிறார். விரும்பி சாப்பிட்டு வந்த உணவு வகைகளை நிறுத்தி உள்ளார். குறிப்பாக நோயை தீவிரப்படுத்தும் உணவு வகைகளான நட்ஸ், உருளைக்கிழங்கு, தக்காளி, முட்டைகள், பால் பொருட்கள் உள்ளிட்ட உணவுகளை முழுமையாக தவிர்த்து விட்டார். பிடித்தமான பிரெட்டையும் தொடவில்லை. இந்த நிலையில் தற்போது ஒரு வருடம் நான்கு மாதங்களுக்கு பிறகு தனக்கு விருப்பான பிரெட்டை பட்டருடன் சேர்த்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன் என்று சமூக வலைதளத்தில் பதிவு வெளியிட்டு உள்ளார். மருத்துவரிடம் ஆலோசனை பெற்று பிரெட் மற்றும் பட்டரை அவர் சாப்பிட்டதாக கூறப்படுகிறது. சமந்தாவின் பதிவு வைரலாகிறது.

## டென்மார்க் ஓபன் பேட்மிண்டன்: முதல் சுற்றில் சிந்து வெற்றி



டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி ஓடென்ஸ் நகரில் தொடங்கியது. பெண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் உலக சாம்பியனான இந்தியாவின் பி.வி.சிந்து 2114, 1821, 2110 என்ற செட் கணக்கில் கிர்ஸ்டி கில்மோரை (ஸ்காட்லாந்து) தோற்கடித்தார். வெற்றிக்காக 56 நிமிடங்கள் போராடிய சிந்து 2வது சுற்றில் கிரிகோரியா மரிஸ்கா துன்ஜங்குடன் (இந்தோனேசியா) மோதுகிறார். ஆகர்ஷி காஷ்யப் (இந்தியா), முன்னாள் ஒலிம்பிக் சாம்பியன் கரோலினா மரின் (ஸ்பெயின்) ஆகியோரும் தங்களது ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.

ஆண்கள் பிரிவில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீரரான இந்தியாவின் ஸ்ரீகாந்த் 2119, 1021, 1621 என்ற செட் கணக்கில் வெங் ஹாங் யாங்கிடம் (சீனா) பணிந்தார். இதே போல் இந்திய இளம் வீரர் லக்ஷயா சென்னும் முதல் சுற்றுடன் நடையை கட்டினார். அவரை 2116, 2118 என்ற நேர்செட்டில் வாங்சரியோன் (தாய்லாந்து) வீழ்த்தினார்.

இரட்டையர் பிரிவில் 'நம்பர் ஒன்' ஜோடியான இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி சிராக் ஷெட்டி ஜோடி கடைசி நேரத்தில் விலகியதால் அவர்களை எதிர்த்து ஆட இருந்த மலேசியாவின் ஒங் யேவ் சின் தியோ இ யி இணை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்கு மேலும் 8 உறுப்பினர்கள் தேர்வு



சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (ஐ.ஓ.சி.) 3 நாள் கூட்டம் மும்பையில் நேற்று நிறைவடைந்தது. நேற்று முன்தினம் 2028ம் ஆண்டு ஒலிம்பிக்கில் கிரிக்கெட், ஸ்குவாஷ் உள்பட 5 விளையாட்டுகளை புதிதாக சேர்க்க ஒட்டெடுப்பு மூலம் ஆதரவு அளிக்கப்பட்டது. கடைசி நாளான நேற்று அதிகாரமிக்க ஐ.ஓ.சிக்கு மேலும் 8 உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்தி புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதில் 4 பெண்களும் அடங்குவர். இதனால் ஒட்டுமொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 107ஆக உயர்ந்தது. இதில் பெண்களின் எண்ணிக்கை 41.4 சதவீதம் ஆகும். ஐ.ஓ.சி.யின் கட்டமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்ந்து அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே எங்களது லட்சியம் என்று ஐ.ஓ.சி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய உறுப்பினர்களில் எல் அராத் (இஸ்ரேல்), பாலாஸ் புர்ஜெஸ் (ஹங்கேரி), செசிலியா ரோக்சனா (பெரு), மிட்செல் யோ (மலேசியா) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இதில் மிட்செல் யோ ஸ்குவாஷ் வீராங்கனையாக இருந்து நடிகையானவர். சிறந்த நடிப்புக்காக ஆஸ்கார் விருது பெற்ற சாதனையாளர்.

ஐ.ஓ.சி. குடும்பத்தில் இணைந்தது குறித்து 61 வயதான மிட்செல் யோ கூறுகையில், 'ஒரு முறை என்னிடம் நிருபர் ஒருவர் எப்படி நடிகையானீர்கள் என்று கேட்ட போது, நடிகை ஆக வேண்டும் என்பது எனது கனவல்ல. சிறுவயதில் இருந்தே ஒலிம்பியன் ஆக வேண்டும் என்பதே கனவாக இருந்தது என்று பதில் அளித்தேன். குழந்தை பருவத்தில் இருந்தே விளையாட்டு எனது வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருந்தது. ஸ்குவாஷ், தடகளம், நீச்சல் விளையாட்டில் பங்கேற்று இருக்கிறேன். ஸ்குவாஷ் எனக்கு பிடித்த விளையாட்டாக இருந்தது. காயத்துக்கு இரண்டு கால்முட்டியிலும் ஆபரேஷன் செய்தது பின்னடைவாக அமைந்தது' என்றார்.

## பாகிஸ்தான் அணி வீரர்கள் திடீர் வைரஸ் காய்ச்சலால் பாதிப்பு.!




உலகக் கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி அடுத்து ஆஸ்திரேலியாவை நாளை மறுதினம் பெங்களூருவில் எதிர்கொள்கிறது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணியில் பல வீரர்கள் திடீரென வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் முழுமையாக குண மடைந்து விட்டதாகவும், சிலர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாகவும் அந்த அணியின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். தொடக்க ஆட்டக்காரர் அப்துல்லா ஷபிக் தற்போது அவரது அறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

## 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து: டி.ஜி.வைஷ்ணவா அணியிடம் ஐ.ஓ.பி. தோல்வி



சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில் எஸ்.என்.ஜெ. குழுமம் ஆதரவுடன் 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து போட்டி எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் 9வது நாளான நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (ஐ.ஓ.பி.) 20-25, 22-25, 22-25 என்ற நேர்செட்டில் டி.ஜி.வைஷ்ணவா கல்லூரியிடம் தோல்வியை தழுவியது. 5வது ஆட்டத்தில் ஆடிய ஐ.ஓ.பி. சந்தித்த 2வது தோல்வியாகும். மற்றொரு ஆட்டத்தில் இந்தியன் வங்கி சரிவில் இருந்து மீண்டு 24-26, 28-26, 25-20, 25-21 என்ற செட் கணக்கில் சுங்க இலாகா அணியை வீழ்த்தி 3வது வெற்றியை தனதாக்கியது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.